**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 214 of 2022

Deposition of P.W.1

Name of the Witness: திருமதி.வடிவி

Date : 12.11.2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

2) தாவா சொத்து ஆதியில் என் தாத்தா கந்தேகவுண்டர் பெயரிலிருந்து என் அப்பா பெயரில் மாறியது. தாவா சொத்து என் தாத்தா பெயரில் இருந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்களில் வந்த வருமானத்தை வைத்து புதியதாக சொத்து எதுவும் வாங்கவில்லை. என் தாவாவில் என் தாத்தா பெயரிலிருந்து வந்த வருமானத்திலிருந்து புதியதாக சொத்து வாங்கியதாக சொல்லியிருந்தால் அது தவறு. 2021ல் நான் வாங்கிய வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன். 1993ல் என் அண்ணனும் அவரது பிள்ளைகளான மலர், கந்தசாமி, கருணாநிதி ஆகியோருக்கிடையே பாகபிரிவினை நடந்தது. 1993ல் பாகபிரிவினை ஆனதிலிருந்து அவர் அவர்கள் தனித் தனியாக சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் அப்பா 1993ல் உயிருடன் இருந்தார். என் அண்ணன் குடும்பத்தில் எனக்கு தெரியாமலேயே 15சென்ட்டை பாகம் பிரித்து கொண்டார்கள். தாவா சொத்துக்களின் செக்குபந்தி விவரம் எனக்கு தெரியாது.

3) நான் தாக்கல் செய்துள்ள சொத்துக்கள் ஒரே சர்வே எண்ணில் உள்ளது. 1993ல் என் அண்ணன் குடும்பத்தில் ஏற்பட்ட பாகபிரிவினையில் வந்த சொத்துக்களை அவர்களே அனுபவித்து வருகிறார்கள். அவர்கள் மலர்,

கந்தசாமி, கருணாநிதி ஆகியோர் பஞ்சாலைக்கு சொத்தை விற்றுள்ளார்கள். தாவா சொத்துக்களை யாருக்கும் குத்தகைக்கு விடவில்லை. குத்தகைக்கு விட்டதாக தாவாவில் சொல்லியிருப்பது தவறு தான். தாவா சொத்துக்களை என் அண்ணன் பிள்ளைகள் வங்கியில் அடமானம் வைத்துள்ள விவரம் எனக்கு தெரியாது. அந்த அடமான விவரம் எனக்கு தெரியும், வங்கி மேலாளரையும் ஒரு தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது.

4) வாதிகளுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் 1993லே பாக பிரிவினை ஏற்பட்டு விட்டது என்றாலும், அந்த பாகபிரிவினை அடிப்படையில் 1ம் பிரதிவாதி சொத்துக்களை தனியாக அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. கூட்டாக தாவா சொத்தை அனுபவித்து வருவதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் 3ம் தரப்பினருக்கு விற்கப்பட்டு விட்டது என்றால் சரியல்ல.

5) 1ம் வாதிக்கு பாகம் கோர தகுதியில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் மூதாதையர் சொத்து இல்லை என்றால் சரியல்ல. நான் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் தவறான சங்கதிகள் அடிப்படையில் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.